முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1652

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.04.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. அறம் வேலிகொண்ட அண்ணலே
ஆறுமுகன் என் அவதார வள்ளலே
வரம் தந்து உலகோரை மீட்க வள்ளலாய்
வாழுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 25 ம் நாள், 07.04.2024, ஞாயிற்றுக்கிழமை)
வரமாக உன்னுள் யானிருந்து
வையகத்தை வழிநடத்தி வர
3. வருகவே அரங்கன் உன் தர்மத்தை
வழிமொழிந்து உலகோர் உன்வழி
தர்மவழி உதவி நின்று வந்தால் போதும்
தான் உன் வழி உலகோரெல்லாம் தர்மவான்களாக
4. ஆகவே ஆற்றல் பெருகி இனிதே
அகிலத்தை மாற்றும் சக்திகளாவர்
வகைபட உலகமெங்கும்வள்ளல் உன் தர்மசாலைகள்
மிகைபட பெருகி மேலான தர்ம வளர்ச்சி காண
5. காணவே கலியுகத்தை மீட்கும்
கருணைமிக்க ஞானப்படைகள்
ஞானவான் உன் வழி உலகமெல்லாம் நிரம்பி
ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சியாக
6. ஞானியர்கள் வெளிப்படும் வண்ணம் இனிதே
நம்பகமுற ஞானபண்டிதன் என் தலைமையில்
இனிமைபட இந்த பேருலகம் நல்லாட்சி காணும்
எங்கும் ஞானவான்கள் நிரம்ப அற்புதங்கள் நடந்தேறும்

விளம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–